ஐக்கியதீபம்
திங்கள் AIKIYATHEEPAM. இதழ்

## கடவுள் வாழ்த்து

" பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார் ,,

" தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்
கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது "

" அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது "

" கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்
தாளை வணங்காத் தலை " (தான்

" பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார். "

யா. மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல்
நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம்,
இலக்கம். 11, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

தீபம் : 43 செப்ரெம்பர் - 1994 ஒளி : 6

# தியாகி திலீபன் ஒரு இலட்சிய நெருப்பு!



எமது விடுதலை இயக்கம் எத்தனையோ அற்புதமான தியாகங்களை புரிந்திருக்கிறது; வீர காவியங்களைப் படைத்திருக்கிறது; அர்ப்பணிப்புக்களைச் செய்திருக்கிறது. இவையெல்லாம் எமது ஆயுதப் போராட்ட வரலாற்றில் நாம்ஈட்டிய வீரசாதனைகள். ஆனால் எனது அன்பான தோழன் திலீபனின் தியாகமோ வித்தியாசமானது. வியக்கத்தக்கது. எமது போராட்ட வரலாற்றில் புதுமையானது. சாத்வீகப் போராட்ட களத்தில் தன்னைப் பலிகொடுத்து ஈடு இணையற்ற ஒரு மகத்தான தியாகத்தைத் திலீபன் புரிந்தான்.

அவனது மரணம் ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்ச்சி; தமிழீழப் போராட்டவரலாற்றில் ஒரு புரட்சிகரமான திருப்பத்தை ஏற்படுத்திய நிகழ்ச்சி. தமிழீழத் தேசிய ஆன்மாவைத் தட்டிஎழுப்பிய நிகழ்ச்சி. பாரத நாட்டைத் தலைகுனியவைத்த நிகழ்ச்சி.

*தலைவர் " பிரபா "*

தான் நேசித்த மக்களுக்காக, தான் நேசித்த மண்ணுக்காக, ஒருவன் எத்தகய உயர்ந்த; உன்னத தியாகத்தைச் செய்யமுடியுமோ அந்த அற்புதமான அர்ப்பணிப்பைத்தான் அவன் செய்திருக்கிறான்.

" நான் திலீபனை ஆழமாக நேசித்தேன். உறுதி வாய்ந்த ஒரு இலட்சியப் போராளி என்ற ரீதியில் அவன் மீது அளவு கடந்த பாசம் எனக்குண்டு. அவன் துடிதுடித்துச் செத்துக் கொண்டிருக்கும் பொழுதெல்லாம் என் ஆன்மா கலங்கும். ஆனால் நான் திலீபனை ஒரு சாதாரண மனிதப் பிறவியாகப் பார்க்கவில்லை. தன்னை எரித்துக் கொண்டிருக்கும் ஒரு இலட்சிய நெருப்பாகவே தான் அவனைக் கண்டேன். அதில் பெருமை கொண்டேன்"

இலட்சிய உறுதியின் உச்சக் கட்டமாக திலீபன் தன்னை அழித்துக் கொண்டான். அவன் உண்மையில் சாகவில்லை; காலத்தால் சாகாத வரலாற்றுப் புருஷனாக அவன் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

*அறத்தியாகம் புரிந்து வரலாறு படைத்த தியாகி திலீபனின் மறைவையொட்டி தமிழீழ மக்களுக்கு தலைவர் வே. பிரபாகரன் விடுத்த செய்திகளின் சுருக்கம்.*

### கூ. சங்கங்களுக்கான உணவுப் பொருட்களை—

# சீரான போக்குவரத்து ஏற்படும் வரை கப்பல் கட்டணமின்றி அனுப்பவும்!

### கூட்டுறவுச் சபைத் தலைவர் வேண்டுகோள் !

" பொருளாதாரத் தடையை அரசு ஓரளவு தளர்த்தியுள்ள போதும், பொருட்களுக்கான விலைகளில் குறிப்பிடத்தக்களவு மாற்றத்தை நாம் எதிர் பார்க்க முடியாது. வடபகுதிக்கான தரைமார்க்கமான போக்குவரத்துப் பாதை திறக்கப்படும்வரை கப்பல்மூலமே உணவுப் பொருட்களை கொண்டு வரவேண்டியுள்ளது.

எனவே அத்தியாவசிய உணவுப் பொருட்களை கப்பல் கட்டணங்கள் எதுவுமின்றி யாழ். மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பி வைக்க அரசு நடவடிக்கை எடுப்பதுடன் கடல் வலயச் சட்டத்தை நீக்கி கடற்றொழிலாளர்களின் துயர் துடைக்கப்பட வேண்டும். "

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. வை. செந்திநாதன் சந்திரிகா பண்டார நாயக்கா குமாரணதுங்காவுக்கு விடுத்த வேண்டுகோள் ஒன்றில் இவ்வாறு கேட்டுள்ளார்.

அவர், அவ்வேண்டுகோளில் மேலும் கேட்டுள்ளதாவது;

ஸ்ரீ லங்காவின் புதிய அரச மாற்றத்தோடு கூட்டுறவின் மேம்பாட்டுக்காக அரசின் நடவடிக்கைகளை கூட்டுறவாளர்கள் எதிர் பார்க்கின்றனர். முன்னைய காலங்களில் மக்களுக்கான பாவனைப் பொருட்கள் தனியார் வர்த்தகர்களுக்கு ப. நோ. கூட்டுறவுச் சங்கங்கள் மூலமே விநியோகிக்கப்பட்டு வந்தன. நாளடைவில் அவ்வுரிமை சங்கங்களிடம் இருந்து பறிக்கப்பட்டு விட்டது. இன்று யாழ். மாவட்டத்தில் கூட்டுறவு மொத்த வியாபார ஸ்தாபனம் இயங்காத நிலையில் முன்பு போல

( 6-ம் பக்கம் பார்க்க )

## மா, மண்ணெண்ணை விலை குறைப்பு !

யாழ். குடாநாட்டு மக்களுக்கு கோதுமை மா கிலோ 8ரூபா 50சதமாகவும், மண்ணெண்ணை லீற்றர் 23.00 ( அதிஉச்சவிலை ) ரூபாவாகவும் விற்பனைசெய்ய வேண்டுமென யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் ப. நோ. கூட்டுறவு சங்கங்களுக்கு ஒரு கிலோ மாவை 7 ரூபாவிற்கு வழங்கவுள்ளது.

குடும்ப அட்டைக்கு குடும்பத்திற்கு 3 லீற்றர் மண்ணெண்ணை ப. நோ. கூ. சங்க மூலம் வழங்கவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விதைநெல் தருவிக்க நடவடிக்கை

யாழ். மாவட்டத்தில் காலபோக நெற்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு விதைநெல் வழங்குவதற்காக 1000 புசல் விதைநெல் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப் படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மேற்கொண்டுள்ளது.

(6-ம் பக்கம் பார்க்க )

# இராணுவ நடவடிக்கையால் ஒரு கோடி ரூபா இழப்பு !

யாழ் குடாநாட்டில் 1990ம் ஆண்டுக்குப் பின் இடம்பெற்ற இராணுவநடவடிக்கைகளினால், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 10972410ரூபாவுக்கு இழப்பு ஏ பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பண்டத்தரிப்பு, தெல்லிப்பளை, வேலணை, ஊர்காவற்றுறை, பனை தென்னை வள அவிபிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களே இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டு இழப்புக்குள்ளான சங்கங்களாகும்.

இச்சங்களின் கட்டிடங்கள், தளபாடங்க்ள் உற்பத்தி நிலைய மூலப்பொருட்கள், உபகரணங்கள் உற்பத்தி செய்யப்பட்டபொருட்கள் ஆதியன சேதமடைந்துள்ளதுடன் நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் தொழில் வாய்ப்புக்களையும் இழந்துள்ளனர்.

இந்த இழப்பீடுகள் சம்மந்தமாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ( பனை தென்னை வள ) ஊடாக யாழ். அரச அதிபருக்கும், திட்டப் பணிப்பாளருக்கும் வட கிழக்கு மாகாண சபைக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கடன் வழங்க ஏற்பாடு

சங்கானை ப. நோ. கூ. சங்கம் மக்கள் வங்கியின் உதவியுடன் 30 விவசாயிகளுக்கு நெற் செய்கைக்கான கடன் வழங்க ஏற்பாடுகள் செய்துள்ளது.

மேற்படி நெற்செய்கைக்கு கடன் வழங்குவதற்காக அராலிப் பகுதி சங்கத்தினால் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(6-ம் பக்கம் பார்க்க)

## ஜெனறேற்ரர் எடுத்துவர முயற்சி

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தன் வசமுள்ள " பால் குளிரூட்டிகளை " மீண்டும் செயல்பட வைப்பதற்காக ஜெனறேற்ரர் ஒன்றை கொழும்பில் இருந்து கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறது.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் மூலமாக இந்த ஜெனறேற்ரரை

(6-ம் பக்கம் பார்க்க)

### சிந்தனைச் சுடர்

முதலாளித்துவ முறையில் கூட்டுறவு ஒன்றுதான் நல்ல அமைப்பு. அதை எப்பாடுபட்டாவது அப்படியே கட்டிக்காக்க வேண்டும்

## ஐக்கிய எண்ணம்

### உணவு விநியோகம்

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அத்தியாவசிய உணவுப் பொருட்களை சீரான முறையில் மக்களுக்கு விநியோகம் செய்யப்படவேண்டியதன் அவசியம்; பொதுசன ஐக்கிய முன்னணி அரசினால் தற்போது உணரப்பட்டுள்ளது என்பதை அரசின் நடவடிக்கைகள்மூலம் அவதானிக்க முடிகிறது.

ஐ. தே கட்சியின் 17 வருட ஆட்சிக்காலம் கூட்டுறவுத்துறைக்கு பல வழிகளிலும் பின்னடைவுகளை ஏற்படுத்தியதுடன் கூட்டுறவை மக்கள் மத்தியில் இருந்து அந்நியப்படுத்தியுமிருந்தது.

பொதுசன ஐக்கிய முன்னணி பதவிக்குவந்த பின்னர் பொருளாதாரத் தடையை ஓரளவுக்குத் தளர்த்தியுள்ள போதும், அத்தியாவசிய உணவுப் பொருட்களை குடா நாட்டுக்குள் கொண்டு வருவதற்கான தரைவழிப்பாதையை அரசு இதுவரையும் திறந்துவிடவில்லை.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பப்படும் நிவாரணப் பொருட்களுக்கு அரசு எந்தவிதமான கப்பல் கட்டணமோ, கூலிகளோ அறவிடுவதில்லை. இதே போல் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் எந்தவகையான கப்பல் கட்டணம் இன்றியும், காலதாமதமுமின்றியும் அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுப்பதுடன், பருத்தித்துறை இறங்குதுறையில் இருந்து பொருட்களை சங்கங்கள் தங்கள் களஞ்சியங்களுக்கு எடுத்துச்செல்வதற்கான போக்குவரத்துக் கூலியையும் சங்கங்களுக்கு வழங்க ஏற்ற வசதிகள் செய்ய வேண்டும்.

பொருட் கொள்வனவின் போது கொழும்பில் உள்ள அரசஉயர் அதிகாரிகள், தனியார் வர்த்தகர்களுக்கும், முகவர்களுக்கும் வழங்கும் சலுகைகளையும், முன்னுரிமைகளையும் கூட்டுறவுச் சங்க கொள்வனவுப் பிரதிநிதிகளுக்கும் வழங்காது அவர்களைப் புறக்கணித்து வீண்சிரமங்களையும் காலதாமதங்களையும் அவர்களுக்கு ஏற்படுத்தாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

நெருக்கடியான காலங்களில் உணவுப் பொருட்களுக்கு தட்டுபாடு ஏற்படாவாறு மா, சீனி போன்ற பொருட்களை கணிசமான அளவு இருப்பில் வைத்திருக்க வேண்டிய அவசியம் சங்கங்களுக்கு உண்டு. இந்நிலையில் அரசின் '' விலை குறைப்பு '' அறிவிப்புக்களினால் விலையைக் குறைக்கும் போது பாரிய நட்டத்தை சங்கங்கள் எதிர் நோக்க வேண்டியுள்ளதால் அதற்கான நட்டத் தொகையை அரசு பொறுப்பேற்று அதிலிருந்து சங்கங்களுக்கு நிவாரணமளிக்க வேண்டும்.

இடம்பெயர்ந்தமக்களுக்கு வழங்கப்படும் நிவாரணப் பொருட்களின் ''தரத்தை'' சம்பந்தப்பட்டவர்கள் உறுதி செய்து அவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### கூட்டுறவுக் கொள்கைகள்

# ஆதரவுக்கு ஏற்ற இலாபபாகம் வழங்கல்

அனைத்துலக கூட்டுறவு நிறுவனத்தினால் 1966-ல் பிரகடனப் படுத்தப்பட்ட கூட்டுறவுக் கொள்கைகளில் நான்காவது கொள்கை இங்கு பிரசுரமாகியுள்ளது.
ஆ-ர்

கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாட்டில் இருந்துபெறப்படும் ஏதேனும் மேலதிகங்கள் அல்லது மிச்சங்கள் இருப்பின் அது அக்கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்களுக்குஉரியதாகும் இம் மேலதிகங்கள் ஓர் உறுப்பினருக்கு மற்றைய உறுப்பினர்களின் பங்களிப்பு காரணமாக நன்மைகள் கிடைக்காதபடி பகிரப்படல் வேண்டும். இதனை உறுப்பினர்களின் முடிவுப்படி பின்வருமாறு செய்யலாம்.

(அ) கூட்டுறவுச் சங்கத்தின் நிதிநிலைமையினை அதிகரிக்கும் முகமாக ஒதுக்கீடு செய்தல்.

(ஆ) பொது நல சேவைகளுக்காக ஒதுக்கீடு செய்தல்.

(இ) சங்கத்துடன் உறுப்பினர்கள் செய்துகொண்டுள்ள கொடுக்கல் வாங்கல்களின் வீதாசாரப்படி உறுப்பினர்களிடையே பகிர்தல்.

இக் கொள்கையின் தனித்துவம், சிறப்பு ஆகியவற்றை நோக்கும்போது கூட்டுறவு நிறுவனங்கள் இலாபநோக்கம் உடையவை அல்ல. அவை சேவை நோக்கம் கொண்டவையே என்ற உண்மை தெட்டத்தெளிவாகப் புலப்படுகின்றது. இலாபம் பெறவேண்டும் என்ற கோட்பாடு கூட்டுறவில் இல்லை என்ற தத்துவ ரீதியான உண்மையை உலகுக்கு உணர்த்துகிறது.

இந்நிறுவனங்கள் தமக்குத் தாமே சேவைகளை வழங்கும் போது கட்டணங்களோ அன்றி இலாபத்தையோ அறவிட வேண்டிய அவசியம் இல்லை நிறுவனத்தின் மூலம் சேவைகளை வழங்குபவர்களும் சேவைகளைப் பெறுபவர்களும் உறுப்பினர்களே.

கூட்டுறவுச் சங்கங்களும் வர்த்தக உலகில் செயற்படும் நிறுவனரீதியான அமைப்புக்களே. எனவே இந் நிறுவனங்களும் சேவைகளை வளங்கும் செயற்பாட்டினை மேற்கொள்ளும் போது ஏற்படும் நிறுவனரீதியான செலவுகள் தவிர்க்கமுடியாதது இச்செலவுகளை ஈடுசெய்யவே கூட்டுறவு நிறுவனங்கள் ஒரு சிறுதொகையை செலவுக்கு ஈடாக உறுப்பினர்களிடம் இருந்து கட்டணமாக அல்லது இலாபமாக பெறுகின்றன. இதுதான் சிலசந்தர்ப்பங்களில் ஒரு குறிப்பிட்ட கால முடிவில் மேலதிகமாக அல்லது மிச்சமாக ஏற்படுகின்றது.

ஜனநாயக மரபு வழி நிறுவனங்கள் என்றாலும்கூட இவ் இலாபம் பங்கீடு செய்யும் போது சமத்துவம் என்ற கொள்கை கடைப்பிடிக்கப்படக்கூடாது என்று திட்டவட்டமாக வலியுறுத்தப்படுகிறது. இம்மேலதிகம் எந்த உறுப்பினர்களினால் சங்கத்துக்கு எற்பட்டதோ அவ்வாறே அந்த உறுப்பினர்களுக்கே அவை பகிர்ந்தளிக்கப்படல், வேண்டுமென இக் கொள்கை வலியுறுத்துகிறது. அங்கத்தவர்கள் சங்கத்துடன் செய்துகொண்ட கொடுக்கல் வாங்கல்களுக்கு ஏற்ப இந்த மேலதிகம் உறுப்பினர்களிடையே ஏற்பட ஒரு உறுப்பினர் காரணமாக இருக்கும்போது அம் மேலதிகம் வேறு ஒரு உறுப்பினர்களுக்கு வழங்கப்படக்கூடாதுஎன்பதை இக் கொள்கை தெளிவு படுத்தியுள்ளது. இதுஉறுப்பினர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் மேலும் அக்கறை கொண்டு செயற்பட வழிகோலுவதுடன் உழைப்பவனுக்கே உரியது ஊதியம் என்ற மனிதாபிமான கருத்தினையும் கொண்டுள்ளது.

கூட்டுறவு நிறுவனங்கள் பொருளாதார நோக்குடையனவாக இருப்பது மட்டுமல்லாமல் அவை சமூக அபிவிருத்தியையும் நோக்காகக் கொண்டவைஆகும். கூட்டுறவு நிறுவன உறுப்பினர்கள் வதிகின்ற சமூகத்தின் பொது நல தேவைகளுக்கும் இம் மேலதிகம் உறுப்பினர்களின் முடிவுக்கிணங்க பயன்படுத்தப்படலாம் கூட்டுறவு நிறுவனங்கள் நிதிப்பலம் உடைய நிறுவனமாக அமைய உறுப்பினரின் பங்கு மூலதனம் மட்டும் போதாது. எனவே அவர்களின் முடிவுப்படி ஏதேனும் மேலதிகம்சங்கத்துக்குகிடைத்தால் அதனை சங்கத்தின் நிதிப்பலத்தை பேணுவதற்கு பயன்படுத்தலாம். எனவும் இங்கு வலியுறுத்தியுள்ளதை காணலாம்.

வி. கே. சிவராஜசுந்தரம்
கல்வி பயிற்சி அளிப்பு உத்தியோகத்தர்.
யாழ். ம. கூ. சபை.

### மக்கள் வங்கி நூல் நிலையம்

வட - பிரதேச மக்கள்வங்கி பிராந்திய தலைமை அலுவலகத்தில் புயதி நூல் நிலையம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மக்கள் வங்கிப் பயிற்சி உதவிப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இந்நூல் நிலையத்தை திறந்து வைத்தார்.

இந்நூல் நிலையத்தில் வங்கியாளர்களுக்கும் ஏனையோர்க்கும் உதவும் வகையிலான ஒரு லட்சரூபா பெறுமதியான புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன.

### இலவச விநியோகம்

கட்டைவேலி, நெல்லியடி ப. நோ. கூ. சங்கம் யாழ். மாவட்ட கூட்டுறவு சபையினால் வெளியிடப்படும் ஐக்கிய தீபப் பத்திரிகையை சங்க எல்லைப் பரப்பில் உள்ள சனசமூக நிலையங்கள், வாசிகசாலைகள், பாடசாலைகள் என்பனவற்றிக்கு இலவசமாக வழங்கி வருகிறது.

இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் சட்டவரம்புகளுக்குட்பட்டு மக்கள் சேவையில் தம்மை முற்று முழுதாக அர்ப்பணித்துள்ள கூட்டுறவுச் சங்கங்களின் முக்கியத்துவத்தை அரசு உணர்ந்துசெயலாற்றவேண்டும்.

அரசு, அரச அதிகாரிகள், கூட்டுறவாளர்கள், நுகர்ச்சியாளர்கள் அனைவரினதும் ஒன்றிணைந்த கூட்டுறவு முயற்சிமூலமாக மக்களுக்கு சீரான உணவு விநியோகத்தை மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதே அனைவரது எதிர்பார்ப்புமாகும். கூட்டுறவே நாட்டுயர்வு

## புதிய சம்பளத் திட்டம்

1971 - 1976-ம் ஆண்டு காலப்பகுதிகளில் பட்டதாரிப் பயிலுநர் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட வடகிழக்கு மாகாணத்தை சேர்ந்த 12 கூட்டுறவுப் பரிசோதகர்கள் புதிய சம்பளத்திட்டத்தின் கீழ் 1 6 - 94 முதல் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் தற்போதிய பதவிகளில் இருந்து மாற்றப்பட்டு நிதிதிட்டமிடல் இலாகாக்களுக்கு வேறு பதவிகளுடன் மாற்றம் செய்யப்படவுள்ளனர் என்று தெரியவருகிறது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த திருவாளர்கள் ச. செல்வரத்தினம், மு. மாசிலாமணி, எஸ். கணேசமூர்த்தி, கே. பாலசுப்பிரமணியம் ஆகியோரே புதிய சம்பளத்திட்டத்தில் அமர்த்தப்பட்டவர்களாவர்.

## கூட்டுறவுப் பயிற்சி பரீட்சை முடிவுகள்

கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரியினால் 1992 93 காலப்பகுதியில் நடாத்தப்பட்ட முகாமைத்துவம் தொடர்பான உயர்தர தேசிய சான்றிதழ் பாடநெறிப் பயிற்சியின் பெறுபேறுகள் வருமாறு:

2ம் பிரிவில் சித்தி பெற்றோர் 01, 3ம் பிரிவில் சித்தி பெற்றோர் 18, நுண் சித்தி அடைந்தோர் 11, சித்தி அடையாதோர் 02

1993/94ல் நடாத்தப்பட்ட கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர சாதாரண பிரிவுப் பெறுபேறுகள் வருமாறு;

2ம் பிரிவில் சித்திபெற்றோர் 14, 3ம் பிரிவில் சித்தி பெற்றோர் 09, நுண்சித்தி அடைந்தோர் 12, சித்தி அடையாதோர் 06.

1993 ல் நடாத்தப்பட்ட கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர கனிஷ்ட பிரிவின் பயிற்சியின் பெறுபேறுகள் பின்வருமாறு.

1-ம் பிரிவில் சித்தி பெற்றோர் 04, 2-ம் பிரிவில் சித்தி பெற்றோர் 07, 3-ம் பிரிவில் சித்தி பெற்றோர் 05, நுண்சித்தி 01.

பரீட்சை பெறுபேறுகளை கல்லூரிகளில் பார்வையிடலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கப்பலில் பொருட்கள் கிளைக்குழுத் தேர்தல்

சங்கானை ப. நோ. கூ. சங்கம் மாகொ கப்பலில் 800 பைக்கற் சீமெந்தும், யாழ். மா. வி. உற் சந் நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களில் சமாசம் தட்டச்சு யந்திரங்கள், இரண்டுசில்லு உழவுயந்திரம், ரயர், ரியூப்போன்ற பொருட்களையும் எடுத்துவந்துள்ளன.

அரியாலைபனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் 7 கிளைகளுக்கான கிளைக்குழுத்தேர்தல் 25 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

திரு. ஞா கேநீஸ்வரன் தேர்தல் உத்தியோகத்தராகக் கடமையாற்றினார்.

அன்பான வாசகர்களே! மன்னிக்கவும் ஏமாறாதே, ஏமாற்றாதே - 5 அடுத்த இதழில் வெளிவரும்.

4 ம் பக்கத்தில் உள்ள புற்று நோய்க்கு தமிழ் மருத்துவம் : தொகுத்தவர் வசீகரன், ஆதாரம் ராணி.
ஆர்

### பரீட்சை

கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியினால் நடாத்தப்பட விருக்கும் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நெறி பரீட்சை இம்மாதம் 28-ம் திகதி முதல் அடுத்த மாதம் 5-ம் திகதி வரையும்.

கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர சாதாரண பயிற்சி நெறி பரீட்சை அடுத்த மாதம் 10-ம் திகதி முதல் 15-ம் திகதி வரை நடைபெற்வுள்ளதாக கல்லூரி அதிபர் பொ. சண்முகசுந்தரம் அறிவித்துள்ளார்.

### பயிற்சி வகுப்பு

சாவகச்சேரி ப. நோ. கூ சங்கம் தனது அங்கத்தவர்களுக்கான விவசாய தொழில் நுட்ப பயிற்சி வகுப்பொன்றை நடாத்தியது.

பொது முகாமையாளர் திரு. சி. சிவபாலசுப்பிரமணியம் தலைமையில் சங்கமண்டபத்தில் நடைபெற்ற இப்பயிற்சி வகுப்பினை யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர், விவசாய விரிவாக்க உத்தியோகத்தர், போதனாசிரியர்கள். பயிர் காப்புறுதி வெளிக்கள உத்தியோகத்தர் ஆகியோர் நடாத்தினர்.

### போட்டிஇன்றி தெரிவு

பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூட்டுறவுச் சங்க கிளைக் குழுத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் யாழ். மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் அண்மையில் தாக்கல் செய்யபட்டபோது சங்கத்தின் 13 கிளைகளுக்கும் அங்கத்தவர்கள் போட்டி இன்றித் தெரிவு செய்யப்பட்டனர்.

சங்கம் இடம் பெயர்ந்த நிலையில் இத் தேர்தல் நடைபெற்றது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கூட்டுறவு அலுவலர் திரு. எஸ். கணேசமூர்த்தி தேர்தல் உத்தியோகத்தராகக் கடமை ஆற்றினார்.

### நூலாரம்

வரப்பெற்றோம்.

நங்கூரம் ஆண்டு மலர்,
( சமூக அறிவியல் ஏடு )
பக்கங்கள்: 72, விலை: 15/00
ஆசிரியர் : ஐங்கரநேசன்.

தமிழ் மண்ணில் பல்வேறு இலக்கிய சஞ்சிகைகளின் தோற்றங்களும், அதன்மகிமை வளர்ச்சியிலும் முற்றிலும் மாறுபட்ட வகையில், நவீன அச்சுக்கலை தொழில் நுட்பங்களுடன், மக்களுக்குமக்களாய் மக்களுடன் பல அறிவியல் சமூக பொருளாதார விடயங்களை தாங்கி வருவது நங்கூரத்தின் தனிச்சிறப்பு. இந்த அடிப்படையில் மாணவ சமுதாயத்தால் அதற்கென தனி இலக்கிய வடிவம் உருவாக்கப்பட்டு வருகின்றது.

நடுப்பக்கம் நல்லதோர் சுயம்வரம், மனிதச் சுமையை சமுதாய ஏக்கங்களை, உணர்வுகளை வெளிக்கொணருவதில் பலரும் பலவாறு பேசுவது எழுத்தில் தெரிகின்றது. புலம்பெயர்ந்து சுகமான வாழ்வுக்காக அன்புப் பிணைப்பை அலட்சியம் செய்யும் இளம்

(6-ம் பக்கம் பார்க்க)

# ஆயுதப்போராட்டத்தினாலும் அகிம்சையை உலகுக்கு எடுத்துவிளக்கிய மாவீரர் திலீபன்!

இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 15-9-1987-ல் நல்லூர் கந்தசுவாமிகோயில் வடக்கு வீதியில் உண்ணா நோன்பிருந்து அறத்தியாகம் புரிந்த லெப். கேணல் திலீப னின் 7-ம் ஆண்டு நினைவு நாட்களை ஒட்டி இச் சிறப் புக்கட்டுரை பிரசுரிக்கப்பட் டுள்ளது.

" வீர சுதந்திரம் வேண்டி நின்றால் பின்பு வேறொன்று கொள்வாரோ " என்றபாரதி பாடலுக்கு திருவுருவாய் நின்று விளங்கிய மாமனிதர் தியாகி திலீபன். ஒருநாணயத்தின் இரு பக்கங்களின் குண இயல்புகளை கொண்ட ஒருவரை திலீபன் உருவில் நாம் காண்கிறோம். ஒரு புறம் போர்க்குணம் கொண்ட ஒரு போர் வீரன். மறுபக்கம் சாந்தசொரூபியான தியாகத்தின் வடிவான அகிம்சை வாதியான உருவம். எமது மக்களின் விடிவிற்காக எந்த வழியிலும் போராட லாம் என்று புதியபாதை காட் டிய மாவீரர். இவ்வழியை திலீபன் கற்றுக் கொண்ட இடம் விடுதலைப்புலிகளின் பாசறை. விடுதலைப்புலிகளின் எதிரிகளே போற்றும் ஓர் தன்மானத் தலைவனின் பாசறையில் வளர்ந்து பிரகா சித்து இன்றும் தியாக தீபமாய் விளங்கும் திலீபனை நினைக் கும் போது எமது தேசியத்தின் விடிவுக்காக தன்னையே ஆகுதியாக்கிக் கொண்டிருக் கும் தன்மானத் தலைவனாம் பிரபாகரனை நாம் அங்கே காண்கிறோம்.



விடுதலைவேட்கைகொண்ட தமிழீழத்தின் மறவன் அவன், உலகமே வியக்கும் போர்த் திறன் கொண்ட இயக்கத்தின் சூத்திரதாரி. யாரும் நினைத் துப் பார்க்க முடியாத போர் வியூகங்களின் மூலவேர். தமிழி னத்தின் வெற்றித் திருமகன். தனக்குநிகர்தானே என தலை நிமிர்ந்து நிற்கும் தமிழன். " தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா "

— ஆனந்தன் —

என்ற வாக்கிற்கு செயல்உரு வம் காட்டிய மாவீரன் வழி நடத்தலில், தமிழ் மக்களின் இருண்டவாழ்விற்கு விடிவெள் ளியாய் அணையாஜோதியாய் மக்கள் மனந்தோறும் ஏற்றி வைத்த சுதந்திர ஜோதியே தியாகி திலீபன் என்பதை எவரும், என்றைக்கும் மறந் திட முடியாது.

ஒருவன் திடீரென தியாகி யாகிவிடமுடியாது திலீபனின் வாழ்வு அவனுடைய செயற்பாடுகள். தனக்கென வாழாத தன்மை, தன்னினத் துக்காக, தான் பிறந்தமண் ணுக்காக போராடக்கிளம்பிய துணிவு, போராட்டத்தின் பங் களிப்பு, தமிழ் மக்களுக்கு ஓர் தனி அரசு வேண்டும் என்ற கோட்பாட்டின்சிந்தனைகளை மக்கள் மனம் கவரும் வகை யில் பிரசாரம் செய்தது. ஆயு தத்தால் தான் போராட லாம் என்றில்லாது என்னை நானே இந்த மாபெரும் வேள் வியில் ஆகுதியாக்கி காட்டுகின் றேன் என்று உண்ணா நோன் பிருந்து உலகுக்கே முன் மாதிரிகாட்டிய வைராக்கியம், இத்தனையும் ஒன்று சேர்ந்த ஓர் வடிவம் தான் திலீபன்

திலீபனின் ஊனுடம்பு அழிந் தது. அவன் வாழ்கின்றான். எங்கே தியாக மனப்பான்மை யுண்டோ அங்கே திலீபன் இருக்கின்றான். தீயின்றி எரி யும் தீபங்களாய், எம் இனத் தின் விடிவுக்காக போராடும் ஒவ்வொரு உள்ளத்திலும், உணர்விலும், திலீபன் இருக் கின்றான். தமிழ் மக்களின் இத யத்தில் எல்லாம் திலீபன் வாழ் கின்றான். தியாகத்தின் திரு வுருவான திலீபனின் கனவு நனவாகிக்கொண்டே வருகின் றது. தமிழ் மக்கள் தன்மானத் துடன் வாழும்நிலை என்று தோன்றுகின்றதோ அன்று தான் திலீபனின்ஆத்மா சாந்தி பெறும். அதுவரை தமிழீழத் தின் மண்ணிலும், விண்ணி லும் வீசும் காற்றிலும், எரி யும் நெருப்பிலும், மக்கள் மூச் சிலும் சுதந்திரக் கனலாய் தகிர்த்துக்கொண்டே இருப் பான் தியாகி திலீபன்.



## தி லீ ப ம்

அதி உயர்ந்த தியாகத்தின் அணி சிகரம்
அவனியிலே கண்டிராத அகிம்சைச் சின்னம்
மதிநிறைந்த சத்தியப் போர் செய்த வீரன்
மாசற்ற அக்கினிப் போர் தொடுத்த தீரன்
தமிழீழம் தந்த ஒரு பெரும் தியாகி
தரணிமிசை அன்புப்போர் தந்த ஞானி
தமிழீழம் காத்திடவே களத்தில் நின்றே
கட்டுறுதிப் பட்டினிச்சா கொடுத்த வள்ளல்
வஞ்சகம் செய் அன்னியரின் செய்கை கண்டே
மிஞ்சுகின்ற சத்தியப் போர் வென்ற வீரன்
கொஞ்சமேனும் தண்ணீர் தந்தும் அருந்திடாமல்
விஞ்சுகின்ற அகிம்சைதனை வியக்கச் செய்தார்
அன்னமும் நீர் பருகிடாமல் அகிம்சை என்னும்
அக்கினிப் போர் தொடுத்து எங்கள் தமிழீழத்தின்
மன்னுபெரும் மானங்காத்த மாவீரன் ஆன
தன்னல மில்லாத் தியாகி திலீபம் வாழி !

— கவிமாமணி

★

## மக்கள் புரட்சி வெடிக்கட்டும் !

திலீபன் என்றொரு தியாகி
அகிம்சை வழியில் தன்னுயிரை
ஈழ மண்ணை மீட்பதற்காய்
மெழுகு வர்த்திக்கீடாக
ஒளி யூட்டி வீர சொர்க்கம்
சென்று இப்போ,
ஏழு ஆண்டுகள் ஓடிவிட்டாலும்
அவனது தியாகத்தால்
ஒளி பெறும் தமிழீழம்
கோட்டையிலே புலிக்கொடி
பறக்க வேண்டும் என்றான்.
நாட்டி விட்டோம் கொடியதனை
மக்கள் புரட்சி வெடிக்கட்டும் – சுதந்திர
தமிழீழம் மலரட்டும் என்றான்.
புலிகளும் மக்களும் ஒன்றாகி
தலைவன் வழியிலே
வென்றிடுவோம் சுதந்திர தமிழீழம்.

— லக்ஷி

# உள்ளத்தை உருக்கும் திலீபனின் இறுதி வார்த்தைகள்

' எமது போராட்டத்தில் 650 போராளிகளை இழந்துள் ளோம். ஆனாலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் இலட்சி யம் மாறாது. இந்தப் புனித போராட்டத்தில் இன்று எனது சுயநினைவு அற்றுப்போகலாம். அப்படியே இறக்கவேண்டி வந் தாலும், சந்தோஷத்துடனும், திருப்தியுடனும் எனது மக்க ளுக்காக அதனை நான் ஏற் றுக்கொள்வேன். "

" மக்களே புரட்சிக்குத் தயாராகி விட்டீர்களா ? எமது போராட்டம் தொடர வேண்டும். "

மக்களே! நீங்கள் பெரும் புரட்சிக்குத் தயாராகி விட்ட தனால் மரணத்தறுவாயிலும் எனக்குப்பெரும் உற்சாகம் ஏற்படுகிறது.

" நாம் ஓர் இலட்சியப் போராட்டத்தை நடத்துகி றோம். வெறும் வாக்குறுதி களைநம்பி எமது புனிதமான இந்த உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடு மாறு என்னைக்கோர வேண்டாம். நீங்கள் இவ்வாறு கோருவது எமது இலட்சி யத்தை அவமானப்படுத்துவ தாக இருக்கும் "

" நிலையான முடிவு வரும் வரை எமது போராட்டம் தொடர வேண்டும் என்பதே எமது முடிவு. "

" நான் என் மரணத்தை நேசிக்கிறேன். சாவை சந்தோ ஷத்துடன் அணைக்க தயார். பேசத் துடிக்கிறேன்; என் னால் முடியவில்லை. "

" எனது அவயவங்கள் சிறிது சிறிதாக செயலிழந்து கொண்டே வருகின்றன. இனி யொரு மனிதனாக வாழ முடி யாது என்பது எனக்குத் தெரி கிறது. "

" நான் எனது உயிரிலும் மேலாக நேசிக்கும் மக்களே ! உங்களிடம் ஒரு பெரும் பொறுப்பை விட்டுச் செல்கி றேன். நீங்கள் அனைவரும் பரிபூரணமாகக் கிழர்ந்தெழ வேண்டும். "

" எங்கள் போராட்டம் மக் கள் போராட்டமாக மலர வேண்டும். மக்களே ! புரட் சிக்குத் தயாராகுங்கள். "

— திலீபன்

தமிழ் நாடு காந்தி காமராஜ் காங்கிரஸ் தலைவர்

## திரு. ப. நெடுமாறனுக்கு திலீபனின் இறுதி வேண்டுகோள் !

" இனப் பிரச்சனை சம்மந்தமாக மேற்கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தப்படி பேச்சுவார்த்தையில்எனக்கு நம்பிக்கை இல்லை. இதை எங்கள் நாட்டுமக்களுக்கும், உங்கள் நாட்டு மக்களுக்கும் எடுத்துக்கூறுங்கள். "

— திலீபன்

## தனது நாட்டையும் மக்களையும் நேசித்தவன் திலீபன்

சுதுமலை அம்மன் கோவில் முன்றலில் நடை பெற்றதியாகிதிலீபனின்அஞ் சலிக் கூட்டத்தில் தமிழ் நாடு காந்தி காமராஜ் காங் கிரஸ் தலைவர் திரு. ப. நெடுமாறன் ஆற்றிய உரை யின் ஒரு பகுதி பிரசுரமாகி யுள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் வீரத் தியாகம் புரிந்தவர் மில்லர்; அறத்தியாகம் புரிந்தவர் திலீ பன். இந்த உன்னதமான போராட்டத்தை உருவாக்கி யவர் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபா கரன்.

உலகத்தில் நடைபெற்ற விடுதலைப்போராட்டங்களில் இதைப்போல ஓர் உண்ணா விரதப் போராட்டம் நடை பெற்றதாகச் சரித்திரம் இல்லை.

தம்பி திலீபன் 12 நாட்க ளாக உள்ளம் உருகி உருகி உயிர்த்தியாகம் செய்தார். நான் கடைசியாகச் சந்தித்துப் பேசியபொழுது அவன் உடல் வலுவிழந்திருந்தான். ஆனால் அவனது உள்ளத்தில் வலு இருந்தது. உறுதி தளர வில்லை திலீபன் தனது பிறந்த நாட்டையும், நாட்டு மக்களையும் பற்றிச் சிந்தித் தவன். அதற்காகவே தன் னைத் தியாகம் செய்தவன். அவன் மறைவுக்கு இந்திய அரசாங்கமும் ஒரு காரணம்.

தமிழீழக் கோரிக்கைக்காகப் போராடிவந்த திலீபன் ஒப் பந்தத்துக்குப்பின்னர், கடைசி யாகத் தமது இனத்தின் விடி வுக்காக ஐந்து அம்சக் கோரிக் கைகளை முன்வைத்து நீரா காரம்கூட அருந்தாமல் உண் ணாவிரதமிருந்தார்.

திலீபன் என்னிடம் கூறிய இறுதி வார்த்தைகளை இந் திய மக்களுக்கு எடுத்துச் சொல்லத்தான் போகிறேன்.

# இந்திய அரசிடம் சமர்ப்பித்த ஐந்து அம்ச கோரிக்கைகள் !

★ பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் இன்னும் சிறை களில் அல்லது தடுப்பு முகாம் களில் உள்ளோர் விடுவிக்கப் படல் வேண்டும்.

★ புனர்வாழ்வு என்ற பெய ரில் தமிழர் தாயகத்தில் நடத் தப்படும் சிங்களக்குடியேற்றம் உடனடியாக நிறுத்தப்படல்.

★ இடைக்காலஅரசு நிறுவப் படும்வரை சகல " புனர் வாழ்வு " வேலைகளும் நிறுத் தப்படல்.

★ வடக்குகிழக்கு மாகாணங் களில் பொலீஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படல்.

★ இந்திய அமைதிப்படை யின் மேற்பார்வையில் ஊர் காவற்படை என அழைக்கப் படுவோருக்கு வழங்கப்பெற்ற ஆயுதங்கள் திரும்பப்பெறப் பட்டு, தமிழ் கிராமங்கள் பள் ளிக்கூடங்கள் ஆகியவற்றில் குடிகொண்டுள்ள இராணுவ, பொலீஸ் நிலையங்கள் மூடப் படல்.

# ஓடிக்கொண்டேயிருப்போம் ......?

நாளை எப்படி விடியுமோ என்ற ஏக்கம் நிறைந்த எதிர்பார்ப்புடன் படுக்கைக்குப் போகும் குடாநாட்டு மக்களில் நானும் ஒரு துரும்பு. அளவெட்டி கிராமத்தில் இரண்டு பரப்பு நிலத்தையும், சிறுவீட்டையும், புத்திசுவாதீனமற்ற ஓர் மகனையும், மனைவியையும் வைத்துக்கொண்டு வாழும் குடும்பத்தலைவன். இரண்டு ஆடுகள், பதினொரு கோழிகள், ஒரு நாய் இவைகள் என் பரிவாரங்கள். குறைகள் நிறைந்த மன அமைதி இல்லாத குடும்பத் தலைவனாயிருந்த போதும் பிறர் மனம் நோகாவண்ணம் என் குடும்பம் என்று வாழ்ந்தவன். இரவுக்குபின் விடியலும், விடியலின் பின்பு பகலும், அஸ்தமானமும் என்றில்லாத இரண்டுங்கெட்டான். வாழ்க்கை. சுருங்கச் சொன்னால் விருப்பு, வெறுப்பு, குடும்பம் என்று வாழ்ந்தாலும் இவை யாவையும் கடந்த ஒரு மோனநிலை - முனிவன்.

விடியலுக்கு சேவல்கள் அறைகூவின. ஒழுங்கையில் ஆட்களின் ஆரவாரம். '' அண்ணை தங்கச்சி எங்கே? அம்மா தம்பி எங்கே? அப்பு கவனம். பெட்டி எடுத்தனீங்களே? ஓடுங்கோ, ஓடுங்கோ'' விநாடிக்கு விநாடி ஆரவாரக் கூக்குரல்கள் ஓங்கி ஒலிக்க ஒழுங்கைக்கு ஓடினேன். முண்டியடித்துக்கொண்டு எல்லோரும் ஓடிக்கொண்டிருந்தனர். '' என்னடா தம்பி? '' என்று ஒரு இளவலைக் கேட்டேன். ''ஆமி வருகுது, வாருங்கோ'' என்று கையைப்பிடித்து இழுத்தான். நான் கையை விடுவித்துக்கொண்டதும் அவன் ஓடிக்கொண்டிருந்தான்.

ஆண்டவா! இது என்ன சோதனை? எங்கே ஓடுகிறார்கள்? நேற்றுவரை இந்த மண் எங்களின் சொந்தமண் என்று குதூகலித்துக் கொண்டிருந்த நாங்கள் புகலிடமதேடி ஓடுவானேன்? இதற்காகவா எவ்வளவோ இழப்புகளைத்தாங்கினோம். கடைசியில் நாம் பிறந்து, வளர்ந்து, விளையாடி, வாழ்ந்து, உழைத்து, உல்லாசம் கொண்டாடி, உரிமை பேசி, வேலிக்கதியால் கொஞ்சம் தள்ளி நட்டுவிட்டால் அடுத்த வீட்டுக்காரனுடன் சண்டை போட்டு, வழி வாய்க்கால் பிரச்சனைக்கு வழக்குப்போட்டு, என்ரை, உன்ரை என்று இறுமாப்புக் கூறியவர்கள் எல்லாம், எல்லா உடமைகளையும் விட்டு விட்டு உயிர் பிழைத்தால் போதும் என்று ஓடுகிறார்களே ... ... ! நானும் ஓடவேண்டுமா? ஏன் ஓடணும்? யாருக்காக ஓடவேண்டும்? என்னதான் நடக்குது பார்ப்போம் என்று நினைத்துத் திரும்பியபோது மனைவியும் மகனும் எனக்குப் பின் நின்றிருந்தனர்.

'' ஏனப்பா வந்தனி '' என்றேன்.

'' ஆமி வாறானாம். சனம் ஓடுது... நீங்கள் வேடிக்கை பார்க்கிறியள். நான் இவனைக் கூட்டிக்கொண்டு போறன் பெட்டியுக்கை ஏதாவது எடுத்துக்கொண்டு வாருங்கோ '' என்று கூறிவிட்டு ஒழுங்கையில் இறங்கி விட்டாள்.

பெற்றபிள்ளை பித்தனாயிருந்தாலும் பெற்ற மனம் பித்தல்லவா! பிள்ளையைக் காப்பாற்ற வேண்டுமென்ற மன உந்தலில் போட்டது போட்டபடியிருக்க புறப்பட்ட நாகம்மாவை நினைக்க மனம் ஒருகணம் தடுமாறியது. நான் பொறுப்பில்லாத தலைவனா......? என்னை நானே நொந்துகொண்டு வீட்டிற்குள் நுழைந்து விட்ட போதும் அரம்பத்தில் என் மனதில் எழுந்த, ஏன் ஓட வேண்டும்? யாருக்காக ஓட வேண்டும் என்ற கேள்வியே என்னைத் திக்குமுக்காட வைத்தது.

அழகும், இளமையும் பூரித்துக்குலுங்கிய நாகம்மாவுடன் நான் வாழ்ந்த வாழ்வு - அந்த இனிமை தந்த சுகம் நாளாக, நாளாக வளர்ந்து வருடங்கள் சில கடந்தபோது ஓர் குழந்தையில்லையே என்ற ஏக்கம். நாகம்மா தவித்த தவிப்பு. '' என்னை மலடி என்று ஊரார் தூத்தாயல் நல்லதோ கெட்டதோ ஓர் குழந்தை வேண்டும் '' என்று வேண்டாத தெய்வம் இல்லை. பிடிக்காத விரதம் இல்லை. அவள் கருவுற்ற நாள்தொடக்கம் மீண்டும் ஒரு வசந்தம். இனிமையான கற்பனைகள் - ஏக்கங்கள் தவிர்க்கப்பட்டு அழகே உருவாய் அவன் பிறந்தான். அழகன் என்று பெயரிட்டோம். மகனே உலகம், அவனே சொர்க்கம் என்று அகமகிழ்ந்த நாகம்மாவைப் பார்த்து நானும் மகிழ்ந்திருந்தேன்.

---

## சிறுகதை

**கே. எஸ். ஆனந்தன்**

அழகன் வளர்ந்து ஒன்பது வயதுப்பையன். பள்ளிப்பிள்ளைகளோடு பந்தாடப் போவான். அம்மாவுக்குச்செல்லப்பிள்ளை. பிறந்தநாள் என்றால் வீடே அமர்க்களப்படும். அவன் எது கேட்டாலும் இல்லைஎன்று கூறுது நாகம்மா வாங்கிக் கொடுப்பாள். நான் ஏதாவது பேசிவிட்டால் போதும் அன்றுபூரா நாகம்மா சாப்பிடமாட்டாள் அழகனை வைத்தே சமாதானம் செய்து சாப்பிடவைப்பேன்.

''இங்கே பாருங்கோ, எனக்குளளது ஒரேபிள்ளை. அவனுக்கு செய்யாமல் வேறு யாருக்கு செய்யப்போறன் நீங்களே யோசியுங்கள். என்ரை பிள்ளைக்கு என்ன குறை? பண்டி பல குட்டிபோட்டால் என்ன? சிங்கம் ஒரு குட்டி போட்டாலும் போட்டது தான். அதுபோல நான் பெற்றது சிங்கக்குட்டியெல்லோ '' அவன் பேசத்தொடங்கினால் அடிமுடி இல்லாத விடயங்கள் கோவையாய் வரும். எல்லாம் மகனைப்பற்றியதாய் தானிருக்கும். அவனுக்கு காய்ச்சல், தலையிடி, என்று வந்து விட்டால் வீடே தூள்பறக்கும். அன்றைக்கு உலை கூட வைக்காமல் மகனுக்குப் பக்கத்திலேயே இருந்து விடுவாள். அடுப்படி வேலையை நானே பார்த்தநாட்களும் உண்டு. ஆனாலும் குடும்பம், வாழ்க்கை என்ற ஒரு சந்தோஷப் பிணைப்பில் கவலையின்றி காலம் கழிந்து கொண்டிருந்தது.

விளையாடப்போன மகன் வீடு திரும்ப சுணங்கி விட்டால் துடித்துப்பதைக்கும் நாகம்மா குண்டுச்சத்தம் கேட்டால் சும்மா இருப்பாளா? '' இஞ்சருங்கோ ஷெல் விழுந்த சத்தம் கேட்குது இந்தப் பெடியன் விளையாடப்போனது, ஒருக்கால்போய் பாருங்கோ '' என்று படுத்திருந்த என் காலைப்பற்றி இழுத்தாள்.

'' அது எங்கேயோ கேட்குது பேசாமல் இரும் ''

'' நீங்கள் என்ன மனிசனப்பா ஒருக்காப்போய் பாருங்கோவன் ''

'' எங்கை போவன்? நான் எங்கையெண்டு தேடுறது ''

'' கோயில் வீதிக்கு தான் போறவன் போய்பாருங்கோ '' நிலை கொள்ளாமல் தவித்தாள் நாகம்மா.

''சரிநான்போய் பார்க்கிறன்''

'' பார்க்கிற தென்ன கூட்டிக் கொண்டு வாங்கோ ''

'' சரியப்பா ''

'' உங்களுக்கு பிள்ளை என்று ஒரு துடிப்பில்லை, நாலஞ்சு பெத்து வைச்சமாதிரி இருக்கிறியள். எங்களுக்குள்ளது ஒன்றே ஒன்று......... ''

'' போதும் நீ தொண தொணக்காதே '' என்று கூறிவிட்டு கோயிலடிக்குச் சென்றேன்.

அங்கே ஒரே சனக்கூட்டம் வயலுக்குகிட்ட ஷெல் விழுந்து ஒரு பெடியன் சிதறிப்போனானாம். வயல் பக்கமாய் ஓடிப் போனேன். அழகன் அங்கே தான் நின்றிருந்தான். என்னைக் கண்டதும் ஓடிவந்து '' ஐயா, ஐயா '' என்று அழ ஆரம்பித்து விட்டான்.

'' ஏன் அழுகிறாய்? என்னப்பா நடந்தது? '' என்று அவன் தலையைக் கோதி விட்டேன்.

'' வாத்தியார் மாமாவின்ரை மகனுக்குத்தான்...... ..... ''

'ஹோ' வேன கதறியழுதான்.

'' அழாதே. அம்மா உன்னை தேடிக் கொண்டிருக்கிறாள். வா போகலாம்'' என்று அழைத்துச் சென்றேன்.

மறுநாட் காலை காய்ச்சல் என்று படுத்தவன் தான் பார்க்காத வைத்தியம் இல்லை. மூன்று வருடமாகியும் ஒரு பலனும் இல்லை.

படுத்திருப்பான், எழுந்திருப்பான் எங்கேயும் போகமாட்டான் தனக்குத்தானே ஏதாவது கதைப்பான். சாப்பாடு கொடுத்தால் உண்பான். தண்ணீர் கொடுத்தால் குடிப்பான். தனக்கு என்று எதுவும் கேட்பதில்லை. குழந்தையைப் போல வைத்து அவனைப் பராமரித்துவரும் நாகம்மா கூட அரைப்பத்தியம் போலகிவிட்டான்.

எத்தனையோ நம்பிக்கைகளை, எதிர்பார்ப்புகளை சுமந்து நின்ற என் இதயம் யாவையும் துறந்து சூனியமாகிவிட்டது. விதி விளையாடிவிட்டது என்று மனதைச் சமாதானப்படுத்தவும் முடியவில்லை. நானே எனக்குப் பகையான கதையாய் முடிந்துவிட்ட என் வாழ்க்கையில்.........? எல்லோரும் கைவிட்டு விட்டால் படைத்தவனிடம் தான் அடைக்கலம் தேடவேண்டும். இந்நிலையில் இருக்கும் இடத்தைவிட்டு ஓட வேண்டிய சூழ்நிலையும் வந்துவிட்டது.

நான் கிழவன். மகனோ பித்தன். மனைவி அப்படி. யார் வாழ்ந்து யாருக்கு என்ன பயன்? சாவுக்குப்பயந்து ஓட வேண்டுமா? எங்கேயும் - எப்பவும் சாவுக்கு தப்பிவாழ முடியுமா? பைத்தியக் காரச்சனங்கள், எப்பவுமே இப்படி ஓடிக்கொண்டிருந்தால்..... இதற்கு முடிவு? ' டுமீல் டுமீல் டுமீல் ' தொடரும் துப்பாக்கி வேட்டுகளினால் சிந்தனை தடைப்பட்டதும் பெட்டியைத் தூக்கிக் கொண்டு ஓட்டமும் நடையுமாய் ஒழுங்கையில் இறங்கினேன். எமக்கு என்றிருந்த ஒருபிடிப்பு - எமது சொந்த நிலத்தைவிட்டு கழன்று கொண்டிருக்க, நினைவு மனைவியையும். மகனையும்தொடர புறப்பட்டு விட்டேன்.

கீழ் வானம் வெளுத்து கதிரவன் புறப்படுமுன்னரே போர் விமானங்களும், உலங்கு வானூர்திகளும் வான்பரப்பில் வட்டமிட ஆரம்பித்து விட்டன. இடைக்கிடையே பீரங்கி வேட்டுச் சத்தங்கள். இடைவிடாது துப்பாக்கிகள் வேட்டுக்களை த்தீர்த்துக் கொண்டிருந்தன. கலவரப்பட்ட மக்களின் முகங்களில் மரணபயம். இடியோசையாய் கேட்கும் குண்டுச் சத்தங்கள் உடலையும், உள்ளத்தையும் குலுங்க அடித்தபோதும் ஓட்டமும நடையுமாய் சுன்னாகம் சந்தையில் குழுமியிருந்தவர்களுடன் சேர்ந்து மகனையும் மனைவியையும் தேடிக்கண்டு பிடித்துக் கொண்டதும் மேற்கொண்டு என்ன செய்வது என்ற சிந்தனைக் குழப்பத்தில் ஆழ்ந்தேன்.

சொந்தம் என்று சொல்ல ஒருவரும் இல்லை. எங்கே போய் தங்குவது? சந்தைக் கட்டிடத்துக்குமேலே உலங்கு வானூர்தி ஒன்று வட்டமிட்டு இரைந்தது. கூடியிருந்தவர்கள் சிதறி ஓட ஆரம்பித்தனர். நாகம்மா அழகனை இறுக அணைத்த வண்ணம் அழ ஆரம்பித்து விட்டாள். அவளைத் தேற்றுவதுக்குள் போதும் என்றாகி விட்டது.

ஒருவாறு கோயில் ஒன்றில் அன்றைய பொழுது கழிந்தது. மறுநாள் இருக்க இடம்தேடி ஒரு வீட்டில் மாட்டுக் கொட்டில் ஒன்றல் சில மாதங்கள். மீண்டும் வீடுதேடும் படலம். ஓட்டைக் குடில் என்றாலும் தன் சொந்தக் குடில் போல வருமா? எலிவளை என்றாலும் தனிவளை வேண்டும் என்று முன்கூறி வைத்தார்களோ? இருந்த இரவல் வீட்டுக்காரரும் எழும்புமபடி கூறி விட்டார். வீடுதேடிக் களைத்து விட்டேன். அழுவதற்கு கண்ணில் நீர் இல்லை யார் எதைப் பேசினாலும் கேட்டுக்கொண்டு மௌனமாய் போய்கொண்டு இருப்பதைத் தவிர வேறு என்ன தான் செய்யமுடியும்? கோயில் மடத்தில் இடமிருக்காம். அங்கே புறப்பட்டுக் கொண்டிருக்கிறோம்...... ......?

( யாவும் கற்பனை )

---

# புற்றுநோய்க்கு — தமிழ்மருத்துவம்!

நோய்களில் கொடுமையானது புற்றுநோய். கன்னத்தின் உட்பகுதி உதடு, நாக்கு, தொண்டை உணவுக் குழாய், இரைப்பை, கல்லீரல், மண்ணீரல், பெருங்குடலின் சில பாகங்கள். நீண்ட எலும்புகளின் (கை, கால், தொடை) போன்றவை) நுனிபகுதிகள் ஆகிய இடங்களில் புற்றுநோய் பெரும் அளவில் தோன்றுகிறது. ஆண்களுக்கு ஆண் குறியிலும், பெண்களுக்கு கர்ப்பப்பை வாய்ப்பகுதி, கருக்குழாய், மார்பகம் போன்ற இடங்களிலும் புற்றுநோய் தோன்றுகிறது.

இரத்தப் புற்றுநோய் இருபாலாருக்கும் வரக்கூடியது. இரத்தத்தில் அளவுக்கு மீறி வெள்ளை அணுக்கள் அதிகரிப்பதே இதற்குக் காரணம்.

புகையிலையை வாயில் ஒதுக்கிறவர்களுக்கு கன்னத்தின் உட்பகுதியிலும், மது அருந்துபவர்களுக்கு தொண்டை, உணவுக்குழாய், இரைப்பை, கல்லீரல் போன்ற பகுதிகளிலும், பீடி, சிகரட் புகைப்பவர்களுக்கு நுரையீரலிலும் புற்றுநோய் வரும்.

புற்றுநோய்க்கு சரியான மருத்துவமுறை ஏதும் தெரியாமல் பலர் அந்நோய்க்குப் பலியாகிறார்கள்.

ஆங்கில மருத்துவத்தில் புற்றுநோயைக் குணப்படுத்த இதுவரை மருந்து கண்டு பிடிக்கப்படவில்லை என்கிறார்கள். புற்றுநோய் கண்ட நோயாளிகளின் வாழ்நாளை சற்றுக் காலம் நீடிக்கவைக்க முடிகிறதே தவிர, நோயை முழுமையாகக் குணப்படுத்த ஆங்கில மருத்துவத்தால் முடியவில்லை. இன்று ஆங்கில மருத்துவத்திற்குச் சவாலாக புற்றுநோய் திகழ்கிறது என்பது யாராலும் மறுக்க முடியாத உண்மை.

ஆனால், இன்றைக்கு எத்தகைய புற்றுநோய்களையும் முற்றிய நிலைகளிலும் இருந்தால்கூட முற்றிலும் குணப்படுத்தக்கூடிய மருத்துவமாகத் தமிழ் மருத்துவமே திகழ்கிறது. புற்றுநோயைக் குணப்படுத்தக்கூடிய இன்றையபுதிய ஆராய்ச்சியாளர்களால் கூடக் கண்டுபிடிக்க முடியாத புற்றுநோய் மருந்துகளை நம் சித்தர்கள் அன்றே கண்டுபிடித்து, ஏடுகளில் பதிய வைத்து விட்டார்கள். அந்த மருந்துகளால் அனைத்துவகைப் புற்றுநோய்களையும் குணப்படுத்த முடிகிறது.

### தமிழ் மருந்து :

எந்தப் பகுதியிலும், எந்த இடத்தில் புற்றுநோய் உள்ளதோ அந்த இடத்திலுள்ள புற்றுநோய் அணுக்களை கொன்றழிக்கும் வகையில் தமிழ் மருந்துகள் செயற்படுகின்றன.

புற்றுநோய்க்கு '' மன்னர் மருந்து'' கூறும் நாகம், ரசம், கந்தகம், தங்கம் இவற்றுடன் மூலிகைகளைச்சேர்த்துமருந்து தயாரிக்கின்றார்கள். மார்பக புற்றுநோய்க்கு என்றும் நுரையீரல்ப் புற்று நோய்க்கு என்றும், கர்ப்பப்பை புற்றுநோய்க்கு என்றும், எலும்புப் புற்றுநோய்க்கு என்றும், இரத்தப் புற்றுநோய்க்கு என்றும் தனித்தனி மருந்துகள் உள்ளன. இவை புற்றுநோய் எதிர்ப்புச் சக்தியையும் உடலில் ஏற்படுத்தி மீண்டும் நோய் வராமல் தடுத்து விடுகின்றன.

உலோகங்கள் கலந்து மருந்து சாப்பிடுவதால் சிறுநீரகம் பாதிக்கப்படாதா? என்று சிலர் கேட்கின்றனர். மூலிகையால் உலோகத்தன்மை முற்றிலும் அழிக்கப்பட்டு, அதில் உள்ள

(5 ம் பக்கம் பார்க்க)

# பாரதி எனும் அமுத வீணை



" நல்லதோர் வீணை செய்தே அதை நலம் கெடப் புழுதியில் எறிவ துண்டோ? சொல்லடி சிவசக்தி என்னை சுடர் மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய். வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே! "

பாரதிஎனும் அற்புதவீணை யின்: அமுதகான வீணையின் இன்ப நாதம்: இனிய நாதம் இன்றும் இந்தவையகமெங்கும் இசை பரப்பிக்கொண்டே இருக்கிறது, அமரகவிபாரதி பாடியபாடல்கள் அத்தனை யும் இந்த பாரின்மேன்மைக்கு. " நீ என்னென்ன சொன்னா லும் கவிதை. நீ எங்கெங்கு தொட்டாலும் இனிமை." என்று கவிஞர் கண்ணதாசன் ஒரு கவிதைசொன்னது பாரதியை ஞாபகப்படுத்தியதாகத் தானிருக்கவேண்டும்.

> பாரதியார் நினைவு தினமாகும். இத் தினத்தை ஒட்டி இக் கட்டுரை பிரசுரமாகியுள்ளது.

இனிமை மட்டுமல்ல இதயத்துக்கு ஆறுதல் அளிப்பதாக மட்டுமல்ல வாழ்வதற்கு தேவையான வழிமுறைகளை கவிதைவரிகளில் இசைபோட்டு காட்டியவன் அவன்.

மனதில் உறுதிவேண்டும். வாக்கினிலே இனிமை வேண்டும். நினைவு நல்லது வேண்டும் நெருங்கிய பொருள் கைப்படவேண்டும். கனவுமெய்ப்பட வேண்டும் " என்று வாழ்வின் நல்ல கனவுகள் நினைவாகி நிறைவுபெற சீரான பாதையை தேன் அமுத மொழியால் தித்திக்கும் மொழியால் தேடிச் சொன்னவன் அவன். அவனது ஒவ்வொரு வரியிலும் மொழிப்பற்று, நாட்டுப்பற்று, சமுதாயப்பற்று, பெண்விடுதலை, இளைஞர் எதிர்காலம், நாட்டு நலன் தேங்கி ஊறிக் கிடக்கிறது.

க. கணேசலிங்கம்

தமிழ் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா, செந்தமிழ் நாடென்னும்போதினிலே இன்பத்தேன் வந்து பாயுதுகாதினிலேஎந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா உறுதிகொண்ட நெஞ்சினாய் வா வா வா பூமியில் எவர்க்குமினி அடிமை செய்யோம், பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்; உன் கண்ணில் நீர் வழிந்தால் என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி என் கண்ணில் பாவையன்றோ கண்ணம்மா என்னுயிர் தின்னதன்றோ, மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொழுத்துவோம். இந்த வரிகளுடன் சையை இணைக்கும் வரிபுல் லாங்குழல் கொண்டு வருவான் அமுது பொங்கித்ததும்பு நற் கீதம் படிப்பான் போன்ற எத்தனை அற்புத வரிகளை அந்த மகா கவி தனது இதயவீணையில் மீட்டி மக்களை மீண்டும் மீண்டும் தன்னைப் பற்றி நினைவூட்டச்செய்கிறான்.

" வீணையடி நீ எனக்கு மேவு விரல் நானுக்கு "என்றான். பாரதி இதய வீணையின் நரம்பை மீட்டி இன்பம் சேர்க்கும் இன்னிசை வரியல்லவா இது.

கவிதை என்றால் எப்படி இருக்க வேண்டும் என்று சாதாரண மக்களுக்குக் காட்டித்தந்தவன் அமரகவி பாரதி.

ஓடி விளையாடு பாப்பா. ஒரு குழந்தையை வையாதே பாப்பா கூடி விளையாடு பாப்பா என்று சின்னக்குழந்தைக்கு சிங்காரப்பாட்டெழுதி சின்னஞ்சிறு வயதிலேயே சேர்ந்து வாழும் பழக்கத்தை தன் கவிதையில் சேர்த்து வித்திட்டு வளர்த்தவன் அவன். அன்பை வேருன்ற விட்டவன் அவன்.

"துன்பமே இயற்கைஎனும் சொல்லை மறந்திடுவோம். நம்பினோர் கெடுவிதில்லை இது நான்குமறை தீர்ப்பு, அம்பிகையை சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்" என மனித மனங்களில் நம்பிக்கையை; அசைக்க முடியாத நம்பிக்கையை ஊன்றி விட்டவர் பாரதி.

இந்தப் பாரெல்லாம் மகிழ நல்லதோர் வீணையாய் இசை மீட்டிய பாரதி நம் நெஞ்சங்களிலெல்லாம் இனிய நாதமாய் என்றும் குரல் எழுப்பிக் கொண்டிருப்பான் என்பதில் சந்தேகமேயில்லை!

" களைத்தவர்க்கும், கல்லாத் தமிழர்க்கும் கனிந்தபடி தோலுரித்து சுளைத்தமிழால் சுவையளித்த சுப்பிரமணிய பாரதியார் நாமம் வாழ்க " !

— பாரதிதாசன்

# ஒருவரின் நன்நடத்தைக்கு நற்செய்கைகளே சான்று !

> மாணவர்களே நல்ல பழக்க வழக்கங்களை நீங்கள் எவ்வாறுகற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக இதனைப் படியுங்கள்.

ஒரு கனவான் தனது அலுவலகத்தில் தனக்கு உதவியாகப் பணியாற்ற ஒரு குமாஸ்தா தேவைஎன விளம்பரப்படுத்தியிருந்தார். இந்த வேலைக்கு சுமார் ஐம்பது இளைஞர்கள் விண்ணப்பம் அனுப்பியிருந்தனர். பலரிடம் ஏராலமான சான்றிதழ்களும், பரிந்துரைக் கடிதங்களும் இருந்தது. கனவான், பரிந்துரைக்கடிதம் இல்லாமல் வந்து ஒரு நபரை வேலைக்குஅமர்த்திக்கொண்டு மற்றவர்களை அனுப்பி விட்டார் கனவானுக்கு அருகில் அமர்ந்திருந்த அவரது நண்பர், " எந்தக்காரணத்தில் அடிப்படையில் அந்த நபரை வேலைக்குத் தேர்ந்தேடுத்தீர்கள்? அந்த நபரிடம் சான்றிதழ் இல்லை. பரிந்துரைக்கடிதங்களும் இல்லை " என்றார்.

" நண்டரே, தாங்கள் தவறாகப் புரிந்து கொண்டீர்கள். அந்த நபரிடம் இவை ஏராளமாக உள்ளன. அறைக்குள் நுழைவதற்கு முன்பாக காலைத்துடைத்துக் கொண்டு வந்தார். உள்ளே வந்ததும் கதவை மூடிவிட்டார். இதிலிருந்து அந்த நபர் தூய்மையையும், ஒழுங்குமுறையும் கடைப்பிடிப்பவர் எனத்தெரிகிறது."

" வேண்டுமென்றே தரையில் போட்டிருந்த புத்தகத்தை எடுத்து மேஜையின்மீது வைத்தார். ஆனால் மற்றவர்கள் அதைத்தாண்டி வந்தார்கள். அந்த நபர், தான் அமர்ந்திருந்துஇடத்தை ஒரு வயதான, நொண்டியான நபருக்குக் கொடுத்தார். இதன்மூலம் அந்த நபர் பண்பும், மரியாதையும் உடையவர் என்று அறிகிறோம். அவர் துணிகளை நன்கு துவைத்து அணிந்திருக்கிறார். தலையை ஒழுங்காகச் சீவிக் கொண்டிருக்கிறார். அவரது தோற்றத்தில் தூய்மையும், பண்பும் தெரிகிறதுஅவர் தனது முறைவரும். வரை காத்திருந்தார். மற்றவர்கள் ஒருவரைஒருவர் தள்ளிக்கொண்டு வந்தனர். இது அவரது நல்ல பழக்கங்களை சுட்டிக் காட்டுகிறது."

இவற்றைப் பரிந்துரைகள் எனத்தாங்கள் கருதவில்லையா? நான் அப்படித்தான் கருதுகிறேன். ஆதலால்தான் இந்த இளைஞரை நான் வேலைக்கு அமர்ந்தியிருக்கிறேன். இந்த நபரைச் சரியான முறையில் தேர்ந்தெடுத்திருப்பதாகவே நான் எண்ணுகிறேன். ஏனெனில் அவர் தூய்மையாகவும் நற்பண்புகளுடனும்விளங்கினார். அவர் சீராகவும், ஒழுங்கு முறையுடனும். பண்புடனும் மரியாதையுடனும் நடந்து கொண்டார் "

வேலைக்கு அமர்த்திகொள்ளப்பட்ட அந்த நபரில் நடத்தையுடன் உங்கள் நடத்தையை ஒப்பிட்டுப்பாருங்கள். ஆழ்ந்து சிந்தியுங்கள். உங்களது தவறுகளையும் பலவீனத்தையும் அறிந்து கொள்ளுங்கள். நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் எனத்தெரிந்து கொண்டு உங்களை நீங்களே திருத்திக்கொள்ள முயற்சி செய்யுங்கள்.

தொகுப்பு : க. கனகராசா

**புற்று** ... ... ...

மருத்துவத்தன்மை வீரியப்படுத்துவதால் சிறுநீரகம் பாதிக்கப்படுவது இல்லை. சிறுநீரக செயல் பாதிப்புக்குக் கூட இந் உலோகங்களுடன் அந்நோய்க்குரிய மூலிகைகளுடன் சேர்த்து மருந்து தயாரித்து அளிதநே குணப்படுத்த முடியும்.

முடியாத எதுவும் இல்லை :

புற்று நோய்க்கான மூலிகைகள் தற்போது தமிழ்நாட்டில் அரிதாகி வருகின்றன. அத்தகைய அரிதான மூலிகைகளைப்பெற இன்றைக்கு மிக்க சிரமம் ஏற்படுகிறது.

புற்று நோய்க்கு மட்டும் அல்லாமல் நரம்புத்தளர்ச்சி, இருதயக் கோளாறு, சுரப்பிகளில் வீக்கம், ஆண் - பெண் மலட்டுத்தனம், பக்கவாதம் உட்பட அனைத்து நோய்களையும் தமிழ் மருந்தால் குணப்படுத்த முடியும். தமிழால் மட்டுமல்ல, தமிழ் மருந்தால் குணப்படுத்த முடியும். தமிழால் மட்டுமல்ல, தமிழ் மருந்தாலும் முடியாதது ஒன்றும் இல்லை.

## மாணவர் அரங்கு

**மாணவ மணிகளே !**

ஐக்கிய தீபம் திங்கள் இதழின் 'மாணவர் கழகத்தில்' அங்கத்தவராகி உங்கள் ஆக்கங்களைப் பிரசுரிப்பதற்கும் ' ஐக்கிய தீபம் ' போட்டிகளில் பங்குபற்றவும் உடன் விண்ணப்பியுங்கள்.

உங்கள் பெயர், வயது, பாடசாலை, வகுப்பு, ஆர்வம் போன்ற விபரங்களுடன் அதிபர், அல்லது வகுப்பாசிரியர் ஒப்பத்துடன் உறுதிசெய்து ரூபா 10/ உடன்விண்ணப்பங்களை ஆசிரியர், 'மாணவர் கழகம்' , 'ஐக்கியதீபம்' 14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

## உங்களுக்குத் தெரியுமா?

### அறிவுச் சுடர்

*நாடுகளும், தலைநகரங்களும், நாணயங்களும்*

| | | |
|---|---|---|
| ஜேர்மனி | பொன், பேர்லின் | மார்க் |
| கியூபா | ஹவானா | பெசோ |
| கனடா | ஒட்டவா | டொலர் |
| பாகிஸ்தான் | இஸ்லாமாபாத் | ரூபா |
| ஈரான் | தெஹ்ரான் | ரியால் |
| பிரான்ஸ் | பரிஸ் | பிராங் |
| இந்தியா | புதுடில்லி | ரூபா |
| இஸ்ரேல் | டெல்அவிவ் | பவுண் |
| சீனா | பீக்கிங் | யுவான் |
| பிலிப்பைன்ஸ் | மணிலா | பெசோ |
| லெபனான் | பேரூட் | பவுண் |
| வியட்நாம் | ஹோசிமின் சிமற்றி | டோல் |
| எத்தியோப்பியா | எடிங் அபாபா | டொண் |
| இத்தாலி | ரோம் | லீர |
| ஐ. இராச்சியம் | லண்டன் | பவுண் |
| ஸ்பெயின் | மட்றிட் | பெசோ |
| சுவீடன் | ஸ்டிக்ஹோம | குரோன |
| சுவிஸ்லாந்து | பேர்ண் | பிராங் |

— சரவணன்

## உலக அதிசயம் !

★ உலகிலேயே மிகவும் நீண்ட நாக்கையுடைய ( 25 செ. மீ) "மேரிபெத்சு" என்ற பெண்ணும் நீண்ட நாக்கை உடைய ( 22 செ. மீ ) ஸ்டீபன் என்ற இளைஞனும் அண்மையில் ஸ்பெயின் நாட்டில் திருமணம் செய்துகொண்டார்கள்.

★ பாலைவனத்திலும் மீன்பிடிக்கலாம். ஆச்சரியமாக இருக்கிறதா? சகாரா பாலை வனத்தில் மீன் பிடிக்கலாம்: பாலை வனத்தில் உள்ள மணலைத்தோண்டி எடுத்தால் அங்கு கிடைக்கும் தண்ணீர் இடையே மீன்கள் கிடைக்கிறதாம்.

★ அந்தமான் தீவில்உள்ள பழங்குடி மக்களிடம் அதிசயமான பழக்கம் ஒன்றுண்டு. மனைவியை இழந்த கணவன், கணவனை இழந்த மனைவிக்கு சுடுகாட்டில் வைத்தே இரண்டாவது திருமணத்தை நடாத்தி வைத்திருக்கிறார்கள். இப்படி நடத்துவதால் இறந்தவர்களின் 'ஆசி' அவர்களுக்குக் கிடைப்பதாக நம்புகிறார்கள்.

## பனம்பழ தொதல்

*தேவையான பொருட்கள் :*

| | | |
|---|---|---|
| கட்டியாக எடுத்த பனங்கழி | - | 2 ரமிளர் |
| பனங்கட்டி. அல்லது சர்க்கரை | - | 1/4 கிலோ |
| சீனி | - | 150 கிராம் |
| அரிசி மா ( வறுத்தது ) | - | 1 2 சுண்டு |
| தேங்காய் ( பெரிது ) | - | 2 |
| வறுத்த உடைத்த பயறு | - | 100 கிராம் |
| ,, ,, கச்சான் | - | 100 கிராம் |
| சாதிக்காய் பொடி, ஏலப்பொடி | - | தேவையான அளவு |

*செய்முறை :*

அரிசி மா, பனங்கழி இரண்டையும் ஒன்றாக சேர்க்கவும். தேங்காயைத் துருவி பிழிந்து முதலாம்பாலை வேறாக வைக்கவும். 2ம், 3ம் பாலில்சர்க்கரையையும், சீனியையும் கரைத்து வடித்து எடுக்கவும். அதற்குள் பனங்கழி, அரிசிமா கலவையை கரைத்து அடுப்பில் வைத்துக் காய்ச்சவும். மா அவிந்து வந்ததும் முதலாம் பாலை விட்டு நன்கு எண்ணெய் வரும் வரை கிளறவும். அதன்பின் கச்சான், பயறு, ஏலம் சாதிக்காய் எல்லாவற்றையும் சேர்த்துக்கிளறவும். எண்ணெய் கரண்டியினால் எண்ணெய்யை அள்ளி எடுக்கவும், பின்னர் இறுகியதும் ஒரு தட்டில் கொட்டி விரும்பிய வடிவில் பரிமாறிக் கொள்ளலாம்.

— க. மலர்விழி

## பட்டத்துடன் பறந்த சிறுமி

சமீபத்தில் ஆஸ்திரேலியாவில் " பட்டம் " விடும் போட்டி ஒன்று நடைபெற்றது அப்போது அப்போட்டியைப் பார்க்க வந்தவர்களுக்கு ஒரு பரபரப்பான சம்பவத்தைப் பார்க்க நேரிட்டது.

காற்று பலமாக வீச கீழே இருந்த இராட்சத பட்டமொன்று மேலே உயர்ந்தது. அதைப்பார்த்த ஆறுவயதுள்ள சிறுமி 'கதாய்' ஓடிப்போய் பட்டத்தின் நூலைப் பிடிக்க பட்டம் 180 அடி உயரம் போய் விட்டது.

சிறுமி பயந்துகொண்டே நூலைக்கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள். பட்டம் 300 மீற்றர் உயரம் பறந்தபின் காற்றின் வேகம்குறைய பட்டம் கீழே இறங்க சிறுமி 'கதாய்' பொத்தென்று கீழே விழுந்துவிட்டாள்.

பாவம், சிறுமி நொடையில் சிறு காயத்துடன் தப்பி விட்டாள்.

# முதல் இரு உயிருள்ள மகப்பேற்றுக்கும் 84 வேலை நாட்கள் சம்பளத்துடன் லீவு

20 - 11 - 1985 - ல் நடைமுறைக்குவந்த 44-ம் இலக்க கடை காரியாலய ஊழியர் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் முதல் இரு உயிருள்ள பிரசவங்கள் தொடர்பில் பெண் ஊழியர் ஒருவர் மொத்தமாக 84 வேலை நாட்கள் சம்பளத்துடன் கூடிய லீவாக பெற்றுக் கொள்ள உரித்துடையவராவர்.

இவ்வாறு பணியாளர் லீவு சம்மந்தமாக யாழ் மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் திரு. க. சிவப்பிரகாசம் ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கத்திற்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது; இத்தகைய (சம்பளத்துடன் கூடிய) லீவு நாட்கள் கணக்கிடப்படும்போது இடையில்வரும் எல்லா விடுமுறைகளும் லீவு நாட்களும் உள்ளடக்கப்பட மாட்டாது. அடுத்துவரும் பிரசவங்களின் தொடர்பில் 42 நாட்கள் மேற்சொன்ன அடிப்படையில் கணக்கிடப்பட்டு முழுச் சம்பளத்துடனான லீவாக அனுமதிக்கப்படல் வேண்டும்.

மேலும் இது சம்மந்தமாக கூ. ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளரால் சகல கூட்டுறவுச் சங்கத் தலைவர்களுக்கும் வெளியிடப்பட்ட இல: 146/86-ம், 11 - 03 - 1986 திகதியும் கொண்ட சுற்றுநிருபத்துக்கும் அதன் இணைப்புக்கும் தங்கள் கவனம் கோரப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

*விண்ணப்பிக்கும் முறை :*

மகப்பேற்றுக்கு லீவுக்கு விண்ணப்பிக்கும் பெண் ஊழியர்கள் மகப்பேற்றுக்கு ஒரு வார காலத்துக்கு முன்னர் தாம் வேலைபார்க்கும் நிறுவனங்களின் முகாமைக்கு லீவுக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

இவ் விண்ணப்பத்தில் மகப்பேற்று நாளும், எத்தனை பிள்ளைகள் இருக்கிறார்கள் என்ற விபரங்கள் குறிப்பிடப்பட வேண்டும்.

# வாழ்க்கைத் தள்ளுபடி

கூட்டுறவுப் பணியாளர்களுக்கான வாழ்க்கைத் தள்ளுபடி திட்டத்தின் கீழ் தெல்லிப்பளை ப.நோ. கூ சங்கத்தைச் சேர்ந்த பணியாளர் திரு சி. விசாகமூர்த்தி அண்மையில் காலமானதைத் தொடர்ந்து சங்கம் அவருக்கு 5000/ வாழ்க்கைத் தள்ளுபடி வழங்கியுள்ளது.

காலஞ் சென்ற சி. விசாகமூர்த்தி வாழ்க்கைத் தள்ளுபடித் திட்டத்தில் கடந்த வருடம் மே மாதம் அங்கத்தவராகி ஒரு வருடத்தை பூர்த்தி செய்திருந்தமையில் இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்தாக சங்கத்தலைவர் திரு. நா. தவநாதன் தெரிவித்தார்.

# யாழ். பல்கலைக்கழக 14 - வது பட்டமளிப்பு விழா

யாழ். பல்கலைக்கழகத்தின் 14-வது பட்டமளிப்புவிழாவின்போது, மறைந்த பேராசிரியர் அ. துரைராசாவின் பெயரிலான கல்வி, விளையாட்டு, கலை ஆகிய துறைகளில், பல்கலைக் கழகத்தின் தங்கப்பதக்கத்தையும் கலைப் பீடத்திற்குரிய தங்கப்பதக்கத்தையும் யோசப், சந்தியோமைக்கல் கொன்ஸ்சுலிம் விஞ்ஞானப் பீட தங்கப்பதக்கத்தை முருகையா முரளீதரனும் பெற்றுக் கொண்டார்கள்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் தலைமையில் நடைபெற்ற இப்பட்டமளிப்பு விழாவின்போது யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் அமரர் அ. துரைராசாவுக்கு " விஞ்ஞான கலாநிதி " கௌரவப்பட்டம் தேகாந்த நிலையில் வழங்கப்பட்டது.

மறைந்த பேராசிரியார் ப. சந்திரசேகரம் நினைவாக திருமதி சசிகலா குகமூர்த்திக்கு தங்கப்பதக்கம் வழங்கப் பட்டது.

இப் பட்டமளிப்பு விழாவில் 642 பேருக்கு பட்டங்களும், 4 தங்கப்பதக்கங்களுக்கும், 45 பரிசில்களும், புலமைப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

# மக்கள் தேவை அறிந்து சேவை ஆற்றுகின்றது

பனை. தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், இன்றைய மக்களின் தேவைகளை அறிந்து சேவை செய்கின்ற நிறுவனமாக செயற்பட்டு, நாட்டின் பொருளாதார வளச்சியில் தன்னுடையபங்கை நிறைவேற்றி வருகின்றன.

இவ்வாறு ப. தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க சமாசப் பொதுமுகாமையாளர் திரு. கி. சிவனேசன் சங்க கூட்டுறவு தினவிழாவில் கூறினார்.

சங்கத்தலைவர் திரு. தே. நாகராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கூட். ப. கல்லூரி அதிபர் திரு பொ. சன்முகசுந்தரம் பேசுகையில்; இன்று நடைபெற்ற போட்டிகளும், கௌரவிப்புகளும் சங்கம் அமைக்கப்பட்டதின் நோக்கத்தையும். கூட்டுறவாளர்களின் புத்தெழுச்சியையும் புலப்படுத்துவதாகவுள்ளது என்று கூறினார்.

இவ்விழவில் முன்னாள் தலைவர்களானதிருவாளர்கள் சீ. செல்லத்துரை, சு. சதாசிவம், செ முருகேசு, தே. மதுரநாயகம், க. மெய்யழகன், ஆகியோர்களும் முன்னாள் பணியாளர்கள். திருவாளர்கள் மு வேலையா அ. அற்புதம் கி குணரத்தினம், பி. திருநாவுக்கரசு, அ. செல்வநாதன் ஆகியோர்களும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

தொழிலாளர் தினத்தை ஒட்டி நடாத்தப்பட்ட "மரம் ஏற்றுதல் " போட்டியில் தொடர்ந்து 4 வருடம் வெற்றி பெற்ற திரு. தி. அருமைத்துரையும் கௌரவிக்கப்பட்டார் கூட்டுறவு தின விழாவினை ஒட்டி நடாத்தப்பட்ட;போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

**ஜென ...**

கொழும்பில் இருந்து கப்பலில் எடுத்து வருவதற்கான நடவடிக்கையில் சங்கத் தலைவர் திரு. சு. சிவபாலன் ஈடுபட்டுள்ளார்.

ஐந்து லட்ச ரூபா செலவில் எடுத்து வரப்படவிருக்கும் இந்த ஜெனறேற்ரர் மூலம் சங்கத்தின் பால் குளிரூட்டும் நிலையத்தில் உள்ள இரண்டு குளிரூட்டிகளை இயங்கச் செய்யலாம் இதன் மூலம் 3000 லீற்றர் பாலைச் சேமித்து வைக்க முடியும் என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஐ. தே. கட்சி ஆட்சிக் காலத்தின் போது இந்த ஜெனறேற்ரர் எடுத்து வருவதற்கான அனுமதியை கூட்டுப் படைத் தலைமையகம் மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

**விதை ...**

B. G. 350, B. W 351 ஆகிய 3 1/2 மாத இன விதை நெல்லும், A. T. 402 இன 4 மாத விதை நெல்லும், பரீட்சார்த்தமாக B, G. 300 வெள்ளை அரிசி இன விதை நெல் ஆகியவையே வரவிருப்பதாகத் தெரியவருகிறது.

**நூலாரம் ...**

பெண்களுக்கு அறிவுரை என்பதில் தவறில்லை. தேகநலனைப் பேண வைத்திய அறிவுரைகள், விஞ்ஞான வரலாறுகள், மாணவ சமுதாயத்தின் புதிய சிந்தனைகள், விளம்பரங்களில் கவிதைகள் தொழில் சிந்தனைகள். மூன்றாம் உலகின் விஞ்ஞான சமூகபார்வைகள் அனைத்தும் தகவல் களஞ்சியம் தான்.

பக்கங்களைநிரப்புவது இலக்கிய வடிவமல்ல. கருத்தோடு படிப்பதற்கு ஒரு சஞ்சிகையை சிறப்பாக நடாத்த முடியும் என்ற இருபத்தி நாலாவது இதழிலும் நன்கு தெரிவது எல்லோர் மனத்திலும் வாழ்த் தொழியாகத் தெரிகின்றது. ஆசிரியரின் தாங்காதசுமைக்கு ஒவ்வொருவரும் கைகொடுப்பது எதிர்காலத்திலும் நல்லாரோக்கியமாக இருக்கும் என " ஐக்கியதீபம் " நெஞ்சம் நிறைந்தவாழ்த்தொழியை தெரிவிக்கின்றது.

ஐ எஸ் ஏ.

# கருத்தரங்கும் பயிற்சியும்

யாழ். மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இம்மாதம் 23ம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். ப. நோ. கூ. சங்கத்திலும் 24ம் திகதி சனிக்கிழமை மானிப்பாய், தெல்லிப்பளை, பண்டத்தரிப்பு ப தெ. வ. அ. கூ. சங்க லிகிதர்களுக்கும் 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிக்கன கடனுதவி கூ. சங்க உறுப்பினர்களுக்கு அல்வாய் இலங்கா வித்தியாலயத்திலும் கருத்தரங்கினை நடத்துவதற்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை ஏற்பாடு செய்துள்ளது.

இக்கருத்தரங்குகளில் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி அதிபர், விரிவுரையாளர்கள் யாழ். கூட்டுறவு அபிவிருத்தி நிலைய அதிபர் ஆகியோர் கருத்துரைவழங்குவார்களென மாவட்டச் செயலாளர் திரு. சு. சிவசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

**சீரான ..**

பாவனைப் பொருட்கள் ப. நோ. கூ. சங்கங்கள்மூலம் தனியார் வர்த்தக ஸ்தாபனங்களுக்கு வழங்க புதிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொருளாதாரத் தடையை அரசு ஓரளவு தளர்த்தியுள்ள போதும், பொருட்களின் குறிப்பிடத்தக்க விலை மாற்றத்தை எதிர்பார்க்க முடியாமலுள்ளது. வடபகுதிக்கான தரை மார்க்கமான சீரான பாதை ஒன்று அமையும்வரை கப்பல் மூலம் பொருட்களை கொண்டு வரவேண்டியுள்ளது கப்பலுக்கான கூலி கூடுதலாக உள்ளதாலும், மற்றய ஏற்றுக் கூலிகள், தாமதம் ஆகியன பொருட்களின் விலை உயர்வுக்கு காரணிகளாக அமைகின்றன. எனவே அத்தியாவசிய பொருட்களையாவது, அரசு யாழ். மாவட்டத்திற்கு கப்பல் கூலி இன்றி தருவித்து உதவ வேண்டுமென்று கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்பார்க்கின்றன.

ப. நோ. கூ. சங்கங்களுக்கு வங்கியால் தற்போது வழங்கப்படும் கடன் வசதிகள் போதா திருப்பதினால் அத்தொகையைக் கூட்டுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

போர் காரணமாக கடற்றொழிலாளர் நமதுதொழிலை மேற்கொள்ள முடியாத நிலையை கவனத்தில் எடுத்து அவர்கள் தமது தொழிலை எமது கடற் பிரதேசத்தில் மேற்கொள்ள வழி வகுக்கும் வகையில் கடல் வலய சட்டத்தை நீக்கி சகல உதகளையும் வழங்க வேண்டும்.

# நிவாரணம்

யாழ். மாவட்டத்தில் இடம் பெயர்ந்தோருக்கான ஆகஸ்ட் மாதத்திற்குரிய நிவாரணப் பொருட்கள் நான்கு வாரங்களுக்குமுரியதை ஒரே தடவையில் வழங்கவிருப்பதாக யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

## நிவாரணப் பொருட்கள்

" அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் கொள்வனவு செய்து அனுப்பும் பொருட்களையே நாம் இடம் பெயர்ந்த மக்களுக்கு நிவாரணமாக வழங்குகிறோம். "

இடம் பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணப் பொருட்களின் தரம்பற்றிக் கேட்டபோது யாழ். திட்டமிடல் பணிப்பாளர் திரு. எஸ். பத்மநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

**கடன் ...**

6000 ரூபா தொடக்கம் 8000 ரூபா வரை ½ ஏக்கர் முதல் 1½ ஏக்கர் நெற் செய்கைக் காணி உள்ளவர்களுக்கு 16% வட்டியுடன் இக்கடன் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

# பாடசாலை மாணவர்களுக்கு பால் விநியோகம்

பாடசாலைமாணவர்களுக்கு மதிய உணவு வேளையின் போது பால் வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக விவசாய, காணி வன வள அமைச்சர் டி. எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

கிராமப் புறங்களில் சேகரிக்கப்படும் பாலினையேஇதற்குப் பயன்படுத்த இருப்பதாகவும் இதனால் கிராம மட்டத்தில் பால் பண்ணைத் தொழிலை அபிவிருத்தி செய்யலாம் என்றும் இதற்கான நடவடிக்கைகளை அரசு ஆரம்பித்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## விளம்பர அன்பளிப்பு :

தென்மராட்சி கிழக்கு
ப. நோ. கூ. சங்கம்
கொடிகாமம்.

உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்
உடுப்பிட்டி.

கட்டைவேலி - நெல்லியடி
ப. நோ. கூ. சங்கம்
நெல்லியடி.

தெல்லிப்பளை பனை, தென்னை
வள அ. கூ. சங்கம்.

சங்கானை பனை, தென்னை வள
அ. கூ. சங்கம்.

## அறிவித்தல்

" ஐக்கியதீபம் " வருடசந்தா 60/- மட்டுமே. இல. 14, மணிக்கூட்டு வீதியில் உள்ள மாவட்ட கூட்டுறவுச் சபையுடன் தொடர்பு கொண்டு இன்றே சந்தாதாரராகச் சேருங்கள்.

யாழ். மா. கூ சபை அச்சகத்தில் அச்சிட்டு 14, மணிக்கூட்டுவீதி மா. கூ. சபையினரால் செப்ரெம்பர்மாதம் வெளியிடப்பட்டது.